Hallelu-Yah

குர்-ஆன் சொல்லும் அல்லாஹ்வுக்கு இறைவனாக இருக்க அணு....வளவும் தகுதியில்லை என்பதற்கான மிக வலுவான ஆதாரங்கள் :

அல்லாஹ்வை குறித்து, நாம் வைக்கும் எந்த வாதத்தையும், சாதாரணமாக வைக்காமல் இது எந்த அளவிற்கு கொடூரமானது என்று சொல்லி,

அதை, இப்போது யாராவது நடைமுறையில் செய்தால் அப்படிப்பட்டவர்களை நாம் மனிதனாக கூட ஏற்று கொள்ள மாட்டோம் என்று , கிறிஸ்தவத்தையோ, இஸ்லாத்தையோ கூட ஒன்றுமறியாத சாதாரண ஜனங்களுக்கும் மிக எளிதாக புரியும்படி, நன்றாக *Highlight* செய்து காட்ட வேண்டும்.

1. அல்லாஹ்வின் அடிப்படையே மிக பயங்கர தவறாக உள்ளது.

படைக்கும் போதே நரகத்திற்காக மனிதனை படைப்பது எப்படி நியாயம்?

கொடுமையை இறைவன் எப்படி செய்வார்?

7:179. நிச்சயமாக நாம் ஜின்களிலிருந்தும், *மனிதர்களிலிருந்தும் அநேகரை நரகத்திற்கென்றே படைத்துள்ளோம் ;*

இந்த வசனத்தில் இருந்து நாம் வைக்கும் மிக வலுவான வாதங்கள்:

A. சாதாரண மனிதர்களாகிய நாமே, இதை கற்பனையில் கூட ... நினைத்து கூட ... பார்க்க முடியாத மிக பயங்கரமான கொடூரமாக உள்ளதே!

B. ஒரு தாய் பத்து மாதம் சுமந்து பெற்று, பார்த்து...பார்த்து வளர்த்த பிள்ளையை மிக பயங்கரமான நெருப்பில் தூக்கி எறிந்து, அந்த பிள்ளை துடிக்க துடிக்க, இரக்கமில்லாமல் நெருப்பில் தூக்கியெறியப்பட்டு சித்திரவதை செய்யப்படுவதை பார்த்து: "பெற்றெடுக்கும் போதே உன்னை இந்த நெருப்பில் தூக்கி எறிவதற்காகத்தான் பெற்றெடுத்தேன்" என்று சொன்னால் அப்படிப்பட்ட ஒரு பெண்ணை தாய் என்று நாம் யாராவது ஏற்று கொள்ள முடியுமா?

C. ஒரு தாயாகவே ஏற்று கொள்ள முடியாத போது, ஒரு மனித பெண்ணாக எப்படி ஏற்று கொள்ள முடியும்?!!! இதை நினைத்து பார்க்கும் போதே நம் உள்ளம் கொதிக்கவில்லையா!!!

D. ***அது கூட உடல் வேதனைதான். அதுவும் கொஞ்ச நேரத்தில் உயிர் பிரிந்துவிடும். ஆனால் நரக நெருப்பு என்பது எவ்வளவு கொடுமையானது. இதை நினைத்து பார்க்க முடியுமா???!!!***

E. ***அப்படியிருக்கும் போது ஈவு, இரக்கம் என்றால் என்னவென்றே தெரியாதவனை, அன்பு என்றால் என்னவென்றே தெரியாத, இந்த குர்-ஆன் சொல்லும் அல்லாஹ்வை கடவுள் என்று மனசாட்சி உள்ள எவரும் ஏற்று கொள்ள முடியாது. கற்பனையில் கூட நினைத்து பார்க்க முடியாது ...***

F. ***ஒரு மனிதரும், தப்பி தவறி கூட நரகத்திற்கு போய் விட கூடாது என்று முழு மனித குலத்தின் பாவங்களையும் தன் மேல் ஏற்று கொண்டு, சுமந்து தீர்த்து, யாராலும், தம்முடைய அன்பை மிஞ்ச முடியாத வகையில் தம்முடைய அன்பின் உச்ச நிலையை நிரூபித்து காண்பித்தவராகிய பரிசுத்த வேதாகமத்தின் இறைவன் மெய்யான இறைவனா ?!!!...***

அல்லது,

G. ***படைக்கும் போதே உன்னை நரகத்திற்காகவே படைத்தேன் என்று, அன்பு என்றால் என்னவென்றே தெரியாத, அணுவளவும் இறைத்தன்மையே இல்லாத, இந்த குர்-ஆன் சொல்லும் அல்லாஹ் என்பவன் இறைவனா?!!!...***

H. ***மனசாட்சி உள்ள இஸ்லாமிய சகோதர, சகோதரிகளே சிந்தியுங்கள். இப்படிப்பட்டவனை இன்னும் இறைவன் என்று தொழுகை செய்ய போகிறீர்களா ???!!!...***

2. சிந்தித்து முடிவெடுக்கும் பருவ வயதை அடையாமல் குழந்தையாகவே இருக்கும் நிலையில் மரித்தால் அவர்களின் நிலை குறித்து அல்லாஹ்வின் நிலைப்பாடு :

சஹி முஸ்லிம் - 5174. இறைநம்பிக்கையாளர்களின் அன்னை ஆயிஷா (ரலி) அவர்கள் கூறியதாவது:

(அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களது காலத்தில்) ஒரு குழந்தை இறந்துபோனது. அப்போது நான், "அதற்கு நல்வாழ்த்துகள்! அது சொர்க்கத்தின் சிட்டுக்குருவிகளில் ஒரு சிட்டுக்குருவி" என்று சொன்னேன். அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "உனக்குத் தெரியாதா? அல்லாஹ் சொர்க்கத்தையும் நரகத்தையும் படைத்தபோதே, அதற்கெனச் சிலரையும் இதற்கெனச் சிலரையும் படைத்துவிட்டான்" என்று சொன்னார்கள்.

இது எவ்வளவு பெரிய அநியாயம்!!! அக்கிரமம்!!!

5175. இறைநம்பிக்கையாளர்களின் அன்னை ஆயிஷா (ரலி) அவர்கள் கூறியதாவது:

அன்சாரிகளில் ஒரு குழந்தை இறந்தபோது, அதன் பிரேத நல்லடக்கத்திற்காக அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அழைக்கப்பட்டார்கள்.

அப்போது நான், "அல்லாஹ்வின் தூதரே! அக்குழந்தைக்கு நல்வாழ்த்துகள்! அது சொர்க்கத்தின் சிட்டுக் குருவிகளில் ஒரு சிட்டுக்குருவி. அது எந்தத் தீமையையும் செய்யவில்லை. அதற்கான பருவத்தையும் அது அடையவில்லை" என்று சொன்னேன்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "வேறு ஏதேனும் உண்டா, ஆயிஷா? அல்லாஹ் சொர்க்கத்திற்கென்றே சிலரைப் படைத்துள்ளான். அவர்கள் தம் பெற்றோரின் முதுகுத்தண்டுகளில் இருந்தபோதே அதற்காகவே அவர்களை அவன் படைத்துவிட்டான்; நரகத்திற்கென்றே சிலரைப் படைத்தான். அவர்கள் தம் பெற்றோரின் முதுகுத்தண்டுகளில் இருந்தபோதே அதற்காகவே அவர்களைப் படைத்துவிட்டான்" என்று கூறினார்கள்

A. இதிலிந்து அல்லாஹ் என்ன சொல்ல வருகிறார் என்று புரிகிறதா?

B. நன்மை தீமை அறியும் பருவத்தை அது அடையாத நிலையில் குழந்தையாக மரித்தாலும்,

C. அதை அல்லாஹ் படைக்கும் போதே சொர்க்கத்திற்காக படைத்திருந்தால்தான் அது சொர்கத்திற்கு போகும்.

D. அல்லாஹ் அந்த குழந்தையை படைக்கும் போதே நரகத்திற்காக படைத்திருந்தால் அது குழந்தையாக மரித்தாலும் நரகத்திற்கு தான் செல்ல வேண்டியிருக்கும் என்பது தான் அல்லாஹ் இதன் மூலம் சொல்லுகின்ற கருத்தாகும்.

E. இதை கேட்கும் போதே நம் உள்ளம் பதைக்க வில்லையா?

F. என்னை பின்பற்றினால் கண்டிப்பாக சொர்க்கம் கிடைக்கும் என்ற இந்த மேலான ஒரே ஒரு நிச்சயத்தை, முழு உலகத்திற்கும், *Atleast* தன்னை நம்பும் முஸ்லிம்களுக்கு கூட, *Atleast* ஒரு மனிதனுக்கு கூட கொடுக்க முடியாத, கையால் ஆகாத இந்த அல்லாஹ்வை இதற்கு மேல் இறைவன் என்று சொன்னால் நம் மனசாட்சியே ஏற்று கொள்ளுமா?

G. சிந்தித்து பாருங்கள். ஒரு குழந்தையை கூட கண்டிப்பாக சொர்க்கம் போகும் என்று கூற முடியாதவனை இறைவன் என்று சொல்ல கூட முடியாதே

H. பின் எப்படி இந்த அல்லாஹ்வை தொழுகை செய்ய முடியும்?

I. தொழுகை செய்து என்ன பயன்?

3. அல்லாஹ்வையே நம்பியுள்ள முஸ்லிகளின் பரிதாபமான இறுதி நிலை குறித்து அல்லாஹ் சொல்வது:

சஹி புஹாரி - 3332. உண்மையே பேசுபவரும், உண்மையே அறிவிக்கப்பட்டவருமான இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

நீங்கள் உங்கள் தாயின் வயிற்றில் நாற்பது நாள்கள் (கருவாக) சேமிக்கப்படுகிறீர்கள். பிறகு அவ்வாறே (40 நாள்களில்) அந்தக் கரு (அட்டை போன்று கருப்பையின் சுவரைப் பிடித்துத் தொங்கும்) ஒரு கருக்கட்டியாக மாறி விடுகிறது. பிறகு, அவ்வாறே (இன்னொரு நாற்பது நாள்களில் மெல்லப்பட்ட சக்கை போன்ற) ஒரு சதைப்பிண்டமாக மாறி விடுகிறது. பிறகு, அல்லாஹ் அதனிடம் ஒரு வானவரை நான்கு கட்டளைகளைத் தந்து அனுப்புகிறான். (அதன்படி) அதன் செயல்பாடு (எப்படியிருக்கும் என்று)ம் அதன் ஆயுளும், அதன் உணவும் (பிற வாழ்வாதாரங்களும் எவ்வளவு என்றும்) எழுதப்படுகின்றன. அக்குழந்தை துர்பாக்கியசாலியா நற்பாக்கியசாலியா என்பதும் எழுதப்படுகிறது. பிறகு அதனுள் உயிர் ஊதப்படுகிறது. இதனால் தான், மனிதன் நரகவாசிகளின் செயலைச் செய்தவண்ணமிருப்பான். இறுதியில், அவனுக்கும் நரகத்திற்குமிடையே ஒரு முழம் மட்டும் தான் இடைவெளி இருக்கும். அப்போது (எதிர் பாராத விதமாக) விதி அவளை முந்திக் கொள்ள, அவன் சொர்க்கவாசிகளின் செயலைச் செய்து சொர்க்கத்தில் நுழைந்து விடுவான்.

ஒரு மனிதன் சொர்க்கவாசிகளின் செயலைச் செய்த வண்ணமிருப்பான். இறுதியில் அவனுக்கும் சொர்க்கத்திற்குமிடையே ஒரு முழம் தான் இருக்கும். அப்போது, (எதிர் பாராத விதமாக) விதி அவனை முந்திக் கொள்ள அவன் நரகவாசிகளின் செயலைச் செய்து நரகத்தில் புகுந்து விடுவான்.

என அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத்(ரலி) அறிவித்தார்.

வாழ்நாள் முழுவதும் அக்கிரமம் செய்தவனுக்கு விதியின் படி, சொர்க்கம். என்ன ஒரு அநியாயம் !!!...

A. அல்லாஹ்வையே நம்பி பிறந்ததிலிந்து அல்லாஹ்வை மட்டுமே வணங்கி சரியாக தொழுகை செய்து, எல்லா இஸ்லாமிய கடமைகளையும் பார்த்து, பார்த்து செய்த முஸ்லிம்கள் இறுதியில் தங்கள் மரிக்கும் நேரத்தில்,

B. தனக்கும் சொர்க்கத்திற்கும் ஒரு முழ இடைவெளி இருக்கும் நிலையில் அவர்களை படைத்த போதே நரகத்திர்காகவே படைத்த காரணத்தால் அல்லாஹ்வின் விதி அவனை பாவம் செய்ய வைத்து, அவன் நரகத்திற்கு செல்வான்.

C. நரகத்திற்கு சென்று அவன் துடி துடிக்கிற ஒவ்வொரு வினாடியும் என்ன சொல்லி புலம்புவான்? இப்படி பட்ட கையால் ஆகாத ஒருவனையா! பிறந்ததிலிருந்து தொழுகை செய்து , நோம்பிருந்து, எல்லா கடமைகளையும் பார்த்து பார்த்து செய்தேன் என்று,

D. இந்த அல்லாஹ்வை தொழுகை செய்த ஒவ்வொரு வேளையையும் நினைத்து புலம்புவானே!

E. நீங்கள் இது வரையில், செய்த அனைத்து தொழுகையும் வீண்!

F. நீங்கள் இருந்த அனைத்து நோம்பும் வீண்!

G. எல்லா கடமையும் வீண்!

H. இதை, நரகத்திற்காகவே உங்களை படைத்தேன் என்று சொல்லி நீங்கள் மரிக்கும் போது, அல்லாஹ் உங்களிடம் சொல்லும் போது அழுது புலம்புவதை விட ,

I. இப்போதே மெய்யான இறைவன் உங்களை அழைக்கிறார்! உங்கள்மேல் உள்ள அன்பின் உச்ச நிலையை நிரூபித்து காண்பித்திருக்கிற மெய்யான பரலோகத்தின் உங்கள் தந்தையாகிய இறைவன் அழைக்கிறார்.

J. இப்போதே அவரிடம் உங்கள் உள்ளத்தை அர்ப்பணிக்க மாட்டீர்களா?

K. இன்னும், உங்களுக்கும், Atleast உங்கள் குழந்தைக்கு கூட சொர்கத்தின் நிச்சயத்தை கொடுக்க முடியாதவனை இன்னும் இறைவனாக தொழுகை செய்ய போகிறீர்களா ???!!!

L. உன்னை படைக்கும் போதே நரகத்திற்காகவே படைத்தேன் என்று சொல்லி நரகத்தில் தூக்கி வீசியெறிய போகிறவனையா இன்னும் தொழுகை செய்ய போகிறீர்கள்.

M. நீங்கள் தொழுகை செய்யும் ஒவ்வொரு நேரத்திலும்: இந்த வார்த்தையை அல்லாஹ் சொல்லி உங்களை நரகத்தில் தூக்கி வீசியெறியும் பரிதாபத்தை எண்ணி பாருங்கள்.

N. அதற்கு மேலும் உங்களால் இந்த அல்லாஹ்வை தொழுகை செய்ய முடியுமா?

நம் பரிசுத்த வேதாகமத்தின் தேவனுடைய மேன்மை :

யோவான் – 8:12 - மறுபடியும் இயேசு ஜனங்களை நோக்கி: நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவஒளியை அடைந்திருப்பான் என்றார்.

யோவான் 5:24 என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; அவன் ஆக்கினைத்தீர்ப்புக்குட்படாமல், மரணத்தைவிட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

யோவான் 3:36 குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்தியஜீவனை உடையவனாயிருக்கிறான்; குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும் என்றார்.

யோவான் 3:16 தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.

I யோவான் 2:25 நித்திய ஜீவனை அளிப்பேன் என்பதே அவர் நமக்குச் செய்த வாக்குத்தத்தம்.

I யோவான் 5:11 தேவன் நமக்கு நித்திய ஜீவனைத் தந்திருக்கிறார், அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறதென்பதே அந்தச்சாட்சியாம்.

இப்படிப்பட்ட , உங்களை படைத்தவராகிய மெய்யான உங்கள் தந்தையாம் இறைவனை இன்னும் மறுதலிக்க போகிறீர்களா ???!!!...

4. மனிதர்கள் கீழ்ப்படியாமல், இறைவனின் கட்டளைகளுக்கு முரண்பட்டு பாவம் செய்து, முரட்டாட்டம் செய்து கொண்டே இருக்க வேண்டும் என்பதர்காகவே படைத்தவன் எப்படி இறைவனாக இருக்க முடியும்?

11:118, 119 : உமது இறைவன் நாடியிருந்தால் மனிதர்களை ஒரே சமுதாயமாக ஆக்கியிருப்பான். (அவ்வாறு நாடாததால்) உமது இறைவன் அருள் புரிந்தவர்களைத் தவிர மற்றவர்கள் முரண்பட்டோராகவே

நீடிப்பார்கள். இதற்காகவே அவர்களை அவன் படைத்தான். "மனிதர்கள் மற்றும் ஜின்கள் அனைவராலும் நரகத்தை நிரப்புவேன்" என்ற உமது இறைவனின் வாக்கு முழுமையாகி விட்டது. – p.j.quran

11:118. உங்கள் இறைவன் எண்ணியிருந்தால் மனிதர்கள் அனைவரையும் ஒரே வகுப்பினராக ஆக்கியிருப்பான். (அவ்வாறு நாடவில்லை.) அவர்கள் தங்களுக்குள் மாறுபட்டுக் கொண்டே யிருப்பார்கள்.

11:119. அவர்களில் உங்கள் இறைவன் அருள் புரிந்தவர்களைத் தவிர. இதற்காகவே (மாறுபடும்) அவர்களை படைத்தும் இருக்கிறான். "ஜின்களைக் கொண்டும் மனிதர்களைக் கொண்டும் நிச்சயமாக நான் நரகத்தை நிரப்புவேன்" என்ற உங்கள் இறைவனின் வாக்கு நிறைவேறியே தீரும்.

-Dharul Hudha - அப்துல் ஹமீது பாகவி தமிழாக்கம்.

இந்த வசனத்தில் இருந்து நாம் வைக்கும் மிக வலுவான வாதங்கள்:

அல்லாஹ், மனிதர்கள் அனைவரும் ஒரே குலமாக, ஒரே சமுதாயமாக ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்று *Atleast* ... விருப்பம் கூட கொள்ளவில்லை.

A. **ஏனென்றால்: அல்லாஹ் -. "மனிதர்கள் மற்றும் ஜின்கள் அனைவராலும் நரகத்தை நிரப்புவேன்" என்று வாக்கு கொடுத்திருக்கிறார்.**

B. **அதனாலேயே மனிதர்களை ஒற்றுமையாக இருக்க விடாமல் ஒருவருக்கொருவர் முரண்பட்டு இருக்க வேண்டும் என்று நாடி இருக்கிறார்.**

C. **ஆக, அல்லாஹ்வின் அடிப்படை நாட்டமே அதாவது விருப்பமே மிக பயங்கர தவறாக உள்ளது.**

D. **அப்படி தவறாக, நாடுவதோடு நிற்காமல்,**

E. **அப்படி, கீழ்ப்படியாமல், பாவம் செய்து முரண்பட்டு கொண்டிருக்கும் மனிதர்களை, அப்படித்தான் அவர்கள் இருக்க வேண்டும் என்று அதற்காகவே படைத்திருக்கிறார் !!!**

F. **இது எவ்வளவு பெரிய அநியாயம். சாதாரண மனிதர்களாகிய நாம் கூட அப்படி விரும்ப கூட மாட்டோம்.**

G. **ஆனால் அல்லாஹ் அதற்காகவே மனிதர்களை படைத்தேன் என்று சொல்கிறானே!**

H. **அப்படியானால் இறை தன்மை என்றால் என்னவென்றே தெரியாதவன் எப்படி இறைவனாக இருக்க முடியும்?**

I. எனவே அல்லாஹ்வின் சட்டங்களுக்கு கீழ்ப்படியாமல், பாவம் செய்து முரண்பட்டு, முரட்டாட்டம் செய்வதற்கு: முழு காரணமும், பொறுப்பும் குர்-ஆன் சொல்கின்ற அல்லாஹ்தான்.

J. அப்படியானால், கீழ்ப்படியாமல் காஃபிர்களாக இருப்பவர்களை தண்டிக்க வேண்டுமானால் தண்டிக்க பட வேண்டிய முதல் நபர் அல்லாஹ் தான்!!! ...

இப்படி பட்டவனை இன்னும் இறைவன் என்று சொல்லி,
தொழுகை செய்ய போகிறீர்களா ?!!!...

நம் பரிசுத்த வேதாகமத்தின் தேவனுடைய மேன்மை :

I தீமோத்தேயு 2:4 : எல்லா மனுஷரும்
இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்.

5. நல்லவர்களை , பரிசுத்தவான்களை அழிக்க துடிக்கும் மிக பயங்கரமான சக்தி எப்படி இறைவனாக இருக்க முடியும் ?

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

என் உயிர் எவன் கையிலுள்ளதோ அவன்மீது சத்தியமாக! நீங்கள் பாவம் செய்யாதவர்களாக இருந்தால், அல்லாஹ் உங்களை அகற்றிவிட்டு, பாவம் செய்கின்ற மற்றொரு சமுதாயத்தைக் கொண்டுவருவான். அவர்கள் அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோருவார்கள். அல்லாஹ்வும் அவர்களை மன்னிப்பான். - சஹி முஸ்லிம் – **5304**

By Him in Whose Hand is my life, if you were not to commit sin, Allah would sweep you out of existence and He would replace (you by) those people who would commit sin

and seek forgiveness from Allah, and He would have pardoned them.

Sahi muslim Hadith – 6622 , Book No : 37.

இந்த வசனத்தில் இருந்து நாம் வைக்கும் மிக வலுவான வாதங்கள் :

A. பாவம் செய்யாமல், நல்லவனாக இருந்துவிட்டால் அல்லாஹ் அழித்து விடுவார்.

B. சாதாரணத்திலும் சாதாரணமான மனிதர்களாகிய நாமே, நம் பிள்ளைகள் தவறே செய்யமல் நல்லவர்களாக இருந்தால் எவ்வளவு அதிகமாக சந்தோஷ படுவோம் . ஆனால் இதற்கு நேர்மாறாக மனிதர்கள் பாவமே செய்யாமல் நல்லவர்களாக

இருந்தால் சந்தோஷப்படுவதற்கு பதிலாக, அல்லாஹ் அவர்களை அழிக்க துடிக்கிறார்.

C. நீ நல்லவனாக இருந்தால் அல்லாஹ் உன்னை அழித்து விடுவார்.

D. அல்லாஹ்வின் ஒரே நோக்கம்: மனிதர்கள் கட்டாயமாக பாவத்தை செய்தே ஆக வேண்டும்.

E. அல்லாஹ்வின் நோக்கத்தை மீறி, தப்பி தவறி கூட, மனசாட்சியின் படி நல்லவர்களாக இருந்துவிட்டால், அல்லாஹ் உன்னை துடைத்து எறிந்து அழித்து விடுவார்.

F. நல்லவர்களின் எதிரி அல்லாஹ்.

G. பரிசுத்தவான்களை அழிக்க துடிக்கும் மகா பயங்கரவாத சக்தி அல்லாஹ்.

H. நன்மையை இவ்வளவு பகையாய் பகைக்கும் பகைவன் அல்லாஹ்.

I. முழு மனித குலத்தின் முதல் எதிரி அல்லாஹ்.

J. இனி, அல்லாஹ்வின் பயங்கரவாத மிரட்டலுக்கு பயந்து, மனிதர்கள் பாவம் செய்து, அல்லாஹ்விடம் மன்னிப்பு கேட்டாலும் மனிதர்களை மன்னிப்பதற்கு, நல்லவர்களின் பகைவன் அல்லாஹ்வுக்கு என்ன தகுதி இருக்கிறது !!!...

K. நல்லவர்களாக வாழ விரும்பும், மனிதாபிமானமுள்ள இஸ்லாமிய சகோதர, சகோதரிகளே: மனசாட்சியின் படி சிந்தித்து பாருங்கள். இனியும் இந்த அல்லாஹ்வை, இறைவன் என்று நம்பி வணங்க போகிறீர்களா?!...

L. இந்த குர்-ஆன் சொல்லும் அல்லாஹ் , நம் பரிசுத்த வேதாகமத்தின் படி - யாரென்றால் :

வெளிப்படுத்தின விசேஷம் -12:17 - அப்பொழுது வலுசர்ப்பமானது ஸ்திரீயின்மேல் கோபங்கொண்டு, தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும், இயேசுகிறிஸ்துவைக்குறித்துச் சாட்சியை உடையவர்களாகிய அவளுடைய சந்ததியான மற்றவர்களுடனே யுத்தம்பண்ணப் போயிற்று.

கர்த்தருக்காக பரிசுத்தமாக இருப்பவர்களோடு, யுத்தம் செய்து, பரிசுத்தவான்களை அழிக்க துடிக்கும் நபர் யாரென்று, இந்த வசனத்தில் உள்ளங்கை நெல்லிக்கனி போல தெள்ள தெளிவாக விளங்குகின்றதல்லவா !!!...

நம் பரிசுத்த வேதாகமத்தின் தேவனுடைய மேன்மை :

எபேசியர் 4:26 நீங்கள் கோபங்கொண்டாலும் பாவஞ்செய்யாதிருங்கள்,

தப்பி தவறி கூட பாவம் செய்யா கூடாது என்று சொல்லும் பரிசுத்த வேதாகமம் சொகின்ற இறைவன் மெய்யான இறைவனா?

அல்லது,

தப்பி தவறி கூட நீ நல்லவனாக இருந்து விட கூடாது.

அப்படி மீறி, மனசாட்சியின் படி நல்லவனாக இருந்து விட்டாலும் உன்னை துடைத்து எரிந்து அழித்து விடுவேன் என்று சொல்லும் குர்-ஆன் ஹதீஸ் சொல்லுகின்ற இந்த அல்லாஹ் இறைவனா?

சிந்திக்கும் சக்தி உள்ளவர்கள் சிந்திக்கட்டும் !!!...

6. பாவத்தை செய்வதற்காகவே மனிதர்களை படைப்பவன் எப்படி இறைவனாக இருக்க முடியும் ?

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், *"நீங்கள் பாவம் செய்யாதவர்களாக இருந்து விட்டால், நிச்சயமாகப் பாவம் செய்கின்ற ஒரு படைப்பை அல்லாஹ் உருவாக்கி* அவர்களுடைய பாவங்களை அவன் மன்னிக்கவே செய்வான் என்று கூறியதை நான் கேட்டுள்ளேன்"

என்றார்கள். **சஹி முஸ்லிம் – 5302**

Abu Sirma reported that when the time of the death of Abu Ayyub Ansari drew near, he said: I used to conceal from you a thing which I heard from Allah's Messenger (may peace be upon him) and I heard Allah's Messenger (may peace be upon him) as sayirig**: Had you not committed sins, Allah would have brought into existence a creation that would have committed sin (and Allah) would have forgiven them.**

Sahi muslim Hadith – 6620, Book No : 37.

இந்த வசனத்தில் இருந்து நாம் வைக்கும் மிக வலுவான வாதங்கள் :

A. **பாவத்தை செய்வதற்காகவே மனிதர்களை படைத்து கொண்டு வருவது: எந்த விதத்தில் நியாயம் ?!!!...**

B. **அவர்கள் பாவம் செய்தால் அதை மன்னிப்பதற்கு அல்லாஹ்வுக்கு என்ன தகுதி இருக்கிறது?**

C. மனசாட்சி உள்ள முஸ்லிம்களே!... சிந்தியுங்கள்.

D. மனிதர்களை குறித்து அல்லாஹ்வின் அடிப்படை நோக்கமே இவ்வளவு பயங்கர தவறாக உள்ளதே !!!...

நம் பரிசுத்த வேதாகமத்தின் தேவனுடைய மேன்மை :

For we are God's handiwork, created in Christ Jesus to do Good works - Ephesians 2:10

ஏனெனில் நாம் கடவுளின் கைவேலைப்பாடு ; நற்செயல்கள் புரிவதற்கென்றே கிறிஸ்து இயேசு வழியாய்ப் படைக்கப்பட்டிருக்கிறோம். இவ்வாறு நற்செயல்கள் புரிந்து வாழும்படி கடவுள் முன்கூட்டியே ஏற்பாடு செய்திருக்கிறார்.

எபேசியர் - 2:10

7. மனிதனை படைக்கும் போதே இறை மறுப்பாளனாகவே, அதாவது காஃபிராகவே படைத்து விட்டு, அந்த மனிதனை அழிப்பவன் எப்படி இறைவனாக இருக்க முடியும்?

சஹி முஸ்லீம் – 5173: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

"கலிர்" அவர்கள் கொன்றுவிட்ட சிறுவன் (இறை) மறுப்பாளனாகவே படைக்கப்பட்டான்.

அவன் (உயிருடன்) வாழ்ந்திருந்தால் தன் பெற்றோரை வழிகேட்டிலும் (இறை) மறுப்பிலும் தள்ளிவிட்டிருப்பான்.

இந்த வசனத்தில் இருந்து நாம் வைக்கும் மிக வலுவான வாதங்கள் :

A. மனிதர்கள் காஃபிராக இருப்பதற்கு: முழு காரணமும், முழு பொறுப்பும் அல்லாஹ்தான்.

B. காஃபிர்களில் முதல் காஃபிர் அல்லாஹ்தான் !!!...

C. காஃபிராக இருப்பவர்களுக்கு தண்டனை கொடுக்க வேண்டுமானால், தண்டிக்க பட வேண்டிய முதல் காஃபிர் அல்லாஹ் தான் !!!...

நம் பரிசுத்த வேதாகமத்தின் தேவனுடைய மேன்மை:

கர்த்தராகிய தம்மை அவர்கள் தடவியாகிலும் கண்டுபிடிக்கத்தக்கதாகத் தம்மைத் தேடும்படிக்கு, அப்படிச் செய்தார்; அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்லவே !!!...
- அப்போஸ்தலர் - 17:27

8. மனிதர்களை வழிகெடுக்கும் மிக அழகிய வேலையை செய்பவன் எப்படி இறைவனாக இருக்க முடியும்?

14:4. ஒவ்வொரு தூதரையும் அவருடைய சமூகத்தாருக்கு அவர் விளக்கிக் கூறுவதற்காக அவர்களுடைய மொழியிலேயே (போதிக்கும் படி) நாம் அனுப்பிவைத்தோம்; **அல்லாஹ் தான் நாடியோரை வழிதவறச் செய்கின்றான்**, தான் நாடியோருக்கு நேர்வழியையும் காண்பிக்கின்றான்; அவன் மிகைத்தவனாகவும் ஞானமுடையவனாகவும் இருக்கின்றான்.

14:4. **Allah lets go astray whom He wills** and lets find guidance whom He wills. And He is the Mighty, the Wise. **(Mufti Taqi Usmani-quran)**

14:4. **Allah sendeth whom He will astray**. **(Pickthal –quran)**

14:4 **Allâh misleads whom He wills.** **Dr. Mohsin –quran**

16:93. (உங்களிடையே கருத்து வேறுபாடுகளே இருக்கக்கூடாது என்று) அல்லாஹ் நாடியிருந்தால் உங்கள் அனைவரையும் ஒரே சமூகமாக ஆக்கியிருப்பான். ஆயினும், **தான் நாடுவோரை அவன் வழிபிறழச் செய்கின்றான்**, தான் நாடுவோரை நேர்வழியில் செலுத்துகின்றான். மேலும், உங்களுடைய செயல்கள் குறித்து உங்களிடம் திண்ணமாக கேள்வி கணக்கு கேட்கப்படும். – **ift quran**

இந்த வசனங்களை வைத்து , இந்த வாதங்களை இது வரை நாம் எங்கும் வைக்கவில்லை . இது மிக வலுவானதாகும்.

சாதாரண ஜனங்களும் மிக எளிதாக , அல்லாஹ் என்பவன் இறைவனாக இருப்பதற்கே லாயக்கில்லாதவன் என்று புரிந்து கொள்ளவர்கள் .

இதே போல இன்னும் அநேக வசனங்கள் உள்ளன . சுருக்கம் கருதி , அல்லாஹ் வழிகெடுத்தல் குறித்த வசனங்களை இதோடு நாம் நிறுத்துகிறோம் .

இந்த வசனத்தில் இருந்து நாம் வைக்கும் மிக வலுவான வாதங்கள் :

A. மனிதர்களை வழி தவற செய்வதும், வழி கெடுப்பதும் இறைவனுடைய செயலா? சிந்தித்து பாருங்கள்.

B. வழி தவற செய்கிறான் என்றால், அதற்கு முன்??? அவர்கள் நல்ல வழியில் நல்லவர்களாக இருந்துள்ளனர்.

C. ஆக , அல்லாஹ் நல்லவர்களை, வழி தவற செய்து வழி கெடுக்கும், மிக அழகிய வேலையை செய்து வருகின்றான் ...

D. சாதாரணத்திலும் சாதாரணமான மனிதர்களாகிய நாமே நம் பிள்ளைகளுக்கு இப்படிப்பட்ட தீயவர்களை குறித்து என்ன சொல்லுவோம்?

அவனோடு சேராதே! உன்னையும் வழி கெடுத்து விடுவான். அவனிடம் எச்சரிக்கையாயிரு! என்று தானே சொல்லுவோம்.

E. நல்லவழியில் இருப்பவர்களை - வழி தவற செய்து, வழி கெடுப்பவர்களை மனிதனாகவே நாம் மதிக்க மாட்டோம்.

F. அப்படியானால் இப்படிப்பட்டவனை இறைவன் என்று கற்பனையில் நினைப்பதற்கு கூட நம் மனசாட்சி இடம் கொடுக்குமா???!!!

மனசாட்சி உள்ளவர்களே சிந்தித்து பாருங்கள்!.

நம் பரிசுத்த வேதாகமத்தின் தேவனுடைய மேன்மை :

மத்தேயு 18:14 - இவ்விதமாக, இந்தச் சிறியரில் ஒருவனாகிலும் கெட்டுப்போவது பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவின் சித்தமல்ல.

9. தான் வழிகெடப்பவர்களை, தப்பி தவறி கூட, மற்ற யாரும் சரியான வழியை காட்டி, நேர்வழியில் நடத்தி விடாத அளவுக்கு !!! , மனிதர்களை வழி கெடுப்பவன் எப்படி இறைவனாக இருக்க முடியும் ?

30:29 - அல்லாஹ் யாரை வழிகெடுத்துவிட்டானோ,

இனி அவருக்கு வேறு எவரால் வழிகாட்ட முடியும் ?

இத்தகையோருக்கு உதவியாளர்கள் யாரும் இருக்கமாட்டார்கள்.

30:29 Who is able to guide him whom

Allah hath sent astray. (Pickthal – quran)

7: 186 அல்லாஹ் வழிகெடுப்பவர்களை, நேர்வழியில் நடத்துவோர் யாரும் இல்லை. அவன் அவர்களை அவர்களின் தவறான வழியிலேயே தட்டழிய விட்டுவிடுகிறான்.

7: 186 – Pickthal quran: Those whom Allah sendeth astray, there is no guide for them. He leaveth them to wander blindly on in their contumacy.

7:178: அல்லாஹ் எவருக்கு நேர்வழி காட்டுகிறானோ அவர் நேர்வழியை அடைந்தவராவார். யாரை வழிகெடுத்துவிட்டானோ, அத்தகையோர் முற்றிலும் இழப்பிற்குள்ளானவர்களே!

Same Orgivement!

மனசாட்சி உள்ள இஸ்லாமிய சகோதர சகோதரிகளே சிந்தியுங்கள்!

மிக முக்கியமாக நாம் கவனிக்க வேண்டியது:

A. ஏற்கனவே அல்லாஹ்வை நிராகரிப்பவர்களைத் தான், இப்படி செய்கிறான் என்று சொல்லி சமாளிக்க முடியாது.

B. ஏனென்றால் வழி தவற செய்கிறான் என்றாலே: அதற்கு முன்?! அவர்கள் நல்ல வழியில் இருந்துள்ளனர்.

C. மேலும் இஸ்லாத்தின் அடிப்படை கொள்கையின் படியே, மனிதர்கள் கீழ்ப்படியாமல் காஃபிராக இருப்பதற்கும் கூட, மேலே நாம் கண்ட வசனங்களின் படி, அல்லாஹ்வே காரணம்.

D. இதற்கு வசன ஆதாரங்கள் கொடுக்க வேண்டிய அவசியமே இல்லாத படி இஸ்லாத்தில், இது மிக அடிப்படையான கொள்கையாக உள்ளது. ஆனாலும் நாம் வசன ஆதாரங்களோடு தான் நம் வலுவான வாதங்களை வைக்கிறோம் !!!...

10. ஆதாம் படைக்கபடுவதற்கு முன்பே, ஆதாம் கண்டிப்பாக பாவம் செய்தே ஆக வேண்டும் என்று எழுதி, அந்த நோக்கத்திற்காகவே மனிதனை படைத்தவன் எப்படி இறைவனாக இருக்க முடியும்?

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

ஆதம் (அலை) அவர்களும் மூசா (அலை) அவர்களும் தர்க்கம் செய்துகொண்டார்கள். மூசா (அலை) அவர்கள், "ஆதம் அவர்களே! எங்கள் தந்தையான நீங்கள் (உங்கள் பாவத்தின் காரணத்தால்) எங்களை இழப்புக்குள்ளாக்கிவிட்டீர்கள்; சொர்க்கத்திலிருந்து எங்களை வெளியேற்றிவிட்டீர்கள்" என்று சொன்னார்கள்.

அதற்கு மூசாவிடம் ஆதம் (அலை) அவர்கள், "நீர்தான் மூசாவா? அல்லாஹ், தன்னுடன் உரையாடுவதற்கு உம்மையே தேர்ந்தெடுத்தான்; அவன் தனது கையால் உமக்காக (வேதத்தை) எழுதினான். (இத்தகைய) நீங்கள், அல்லாஹ் என்னைப் படைப்பதற்கு நாற்பது ஆண்டுகளுக்கு முன்பே என்மீது அவன் விதித்துவிட்ட ஒரு விஷயத்திற்காக என்னைப் பழிக்கின்றீர்களா?" என்று கேட்டார்கள்.

(இந்த பதில் மூலம்) மூசா (அலை) அவர்களை ஆதம் (அலை) அவர்கள் தோற்கடித்து விட்டார்கள்;தோற்கடித்துவிட்டார்கள்" என (இரண்டு முறை) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.. - சஹி முஸ்லிம் - 5157

A. இதன் படி, ஆதாம் பாவம் செய்ததற்கு, முழு காரணமும் முழு பொறுப்பும் அல்லாஹ் தான்.

B. மேலும் இதில் ஆதாம் சொல்லுவதை கவனியுங்கள்: அல்லாஹ் என்மேல் விதித்து விட்ட விஷயத்திற்கு என்னை ஏன் பழிக்கிறீர்கள்? என்று ஆதம் நபி (இஸ்லாத்தின் படி ஆதாமும் நபி) சொல்வதிலிருந்து :

C. மனிதர்கள் செய்யும் பாவத்திற்காக பழிக்க பட வேண்டியவன் அல்லாஹ்தான்.

D. முழு பாவ பழியும் அல்லாஹ்வின் மேல் தான் உள்ளது.

E. பாவத்திற்காக மனிதன் தண்டிக்க பட வேண்டுமானால், தண்டிக்க பட வேண்டிய முதல் நபர் அல்லாஹ்.

F. ஆதாம் பாவம் செய்ததற்காக சொர்கத்திலிந்து துரத்த பட்டாரென்றால் சொர்கத்திலிந்து வெளியேற்ற பட வேண்டிய முதல் நபர் அல்லாஹ்.

G. மூஸா குற்றம் சாட்டுவதையும், அதற்கு ஆதாம் சொன்ன பதிலையும் கவனித்தால்: முழு மனித குலத்தையும், பாவம் செய்ய வைத்து, இழப்புக்குள்ளாக்கியது அல்லாஹ்தான்.

H. முழு மனித குலத்தின் முதல் எதிரி அல்லாஹ்தான்.

I. குர்–ஆன், ஹதீஸ் சொல்கின்ற இப்படிப்பட்ட அல்லாஹ் , நம் பரிசுத்த வேதாகமத்தின் படி - யாரென்றால் :

யோவான் 10:10 : திருடன் திருடவும், கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான்.
நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்.

மனிதர்களின் பாவத்தினால் அவர்களை அழிவுக்கு உட்படுத்திய இந்த அல்லாஹ் நம் பரிசுத்த வேத வசனத்தின் படி, யாரென்று தெள்ள தெளிவாக விளங்கும.

J. பரிசுத்த வேதாகமம் சொல்கின்ற மெய்யான இறைவனின் ஒரே எதிரி குர்-ஆன் ஹதீஸ் சொல்கின்ற இந்த அல்லாஹ்.

K. இப்படி அல்லாஹ்வினால் பாவத்திற்குட்பட்டு அழிவுக்குள்ளாக்கபட்ட மனிதர்கள் மேல் மெய்யான இறைவனாகிய கர்த்தர் தம் அன்பின் உச்ச நிலையை காண்பித்து, மனிதர்களை அல்லாஹ்விடம் இருந்து மீட்டு கொண்டார்.

L. ***So, Root Cause of All sin is allah !!!...***

11. சூழ்ச்சி செய்பவன், அதுவும் சூழ்ச்சி செய்வதில் யாராலும் தன்னை மிஞ்ச முடியாத அளவுக்கு, என்று சொல்பவன் எப்படி இறைவனாக முடியும்?

8:30. மேலும், இந்த நேரத்தையும் நினைவுகூருங்கள்: சத்தியத்தை நிராகரித்தவர்கள் உமக்கு எதிராக சதித் திட்டங்களை உருவாக்கிக் கொண்டிருந்தார்கள்; உம்மைக் கைது செய்ய வேண்டும் அல்லது உம்மைக் கொலை செய்ய வேண்டும் அல்லது நாடு கடத்த வேண்டும் என்பதற்காக!

அவர்கள் தங்களுடைய சூழ்ச்சியைச் செய்துகொண்டிருந்தார்கள்; மேலும்,

அல்லாஹ் தன்னுடைய சூழ்ச்சியைச் செய்துகொண்டிருந்தான். இன்னும் அல்லாஹ் சூழ்ச்சி செய்வோரில் அனைவரையும் விடச் சிறந்தவனாய் இருக்கின்றான்.

இதற்கு பி.ஜே. பதில் சொல்லும் போது :

ஏமாற்றுதல், கேலிசெய்தல் போன்றவை கையாலாகாத பலவீனர்களின் செயல்களாகும். 'ஆகு' என்று கூறி ஆக்கும் வலிமை பெற்றவன், திட்டமிட்டு சூழ்ச்சி செய்யத் தேவை இல்லை எனும்போது இறைவன் ஏன் இப்படிக் கூற வேண்டும் என்று சிலர் நினைக்கலாம்.

பெரும்பாலான மொழிகளில் இத்தகைய சொற்பிரயோகங்களை அதற்குரிய நேரடிப் பொருளைத் தவிர்த்து வேறு பொருளிலும் பயன்படுத்துவதைக் காணலாம்.

உதாரணமாக, "நீ வரம்பு மீறினால் நான் வரம்பு மீறுவேன்'' என்று நாம் கூறும்போது, முதலில் உள்ள வரம்பு மீறுதல் தான் அதன் நேரடிப் பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இரண்டாவதாகக் கூறப்பட்ட வரம்பு மீறுதல், பதிலடி என்ற பொருளில் தான் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஒருவர் நமக்கெதிராக வரம்பு மீறிய பின் அதற்குப் பதிலடி தருவது வரம்பு மீறலாக ஆகாது.

"அவர்கள் கேலி செய்தால் அல்லாஹ்வும் கேலி செய்வான்'' என்பது "கேலி செய்ததற்கான தண்டனையை வழங்குவான்'' என்ற கருத்திலும், "அவர்கள் சூழ்ச்சி செய்கிறார்கள். அல்லாஹ்வும் சூழ்ச்சி செய்கிறான்'' என்பது "சூழ்ச்சியைத் தோல்வியுறச் செய்வான்'' என்ற கருத்திலும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இந்த பதில் மூலம் பி.ஜே. அல்லாஹ்வின் இயலாமையை மாத்திரமல்ல.

நம் கேள்விக்கு பதில் சொல்ல முடியாத தன்னுடைய இயலாமையையும் நிரூபித்து விட்டார்.

இதற்கு நம்முடைய வலுவான வாதம்:

A. இந்த வசனத்தில்: "அவர்கள் செய்தார்கள், அதனால் நானும் செய்தேன்" என்பதோடு மட்டுமிருந்தால், பி.ஜே. சொன்ன பதில் பொருந்தும்.

B. ***ஆனால் அந்த வசனத்தில்: "சூழ்ச்சி செய்வதில் அனைவரையும் விட சிறந்தவன்" என்ற மிக முக்கியமான பகுதியை பி.ஜே. மறைத்துவிட்டு, பதில் சொன்னதன் மூலம் நம் வாதத்தை இன்னும் வலுவாக்கி*** **Conform** ***செய்து அல்லாஹ் என்பவன் இறைவனாக இருப்பதற்கே லாயக்கில்லாதவன் என்று நிரூபித்து விட்டார்.***

C. ***சூழ்ச்சி செய்வதில் அனைவரையும் விட சிறந்தவன் என்று அல்லாஹ் சொன்னதன் மூலம் சூழ்ச்சி செய்வதில் யாரும் தன்னை மிஞ்ச முடியாத அளவு தான் அடிப்படையிலேயே மாபெரும் சூழ்ச்சிக்காரன் என்று அல்லாஹ்வே நிரூபித்து இருக்கிறார்.***

D. ***சூழ்ச்சியிலேயே ஊறி போனவர்கள் தான் இப்படி சொல்வார்கள். இது எப்படி உள்ளது என்றால்: நானே, மாபெரும் சூழ்ச்சிக்காரன்!!! நீங்கள் என்னிடமே உங்கள் சூழ்ச்சி வேலையை காட்டுகிறீர்களா ???!!!... என்று சொல்லுவார்கள்.***

E. ***ஆக, அல்லாஹ் இதன் மூலம், தன் கையால் ஆகாத தனத்தையும்,***

F. ***அடிப்படையிலேயே தான் மாபெரும் சூழ்ச்சிக்காரன் என்றும்,***

G. ***அடிப்படையாகவே, சூழ்ச்சியிலேயே ஊறி போனவன் என்றும் நிரூபித்து இருக்கிறார்.***

H. ***ஆகவே இந்த குர்-ஆன் சொல்லும் அல்லாஹ், இறைவனாக இருப்பதற்கே லாயக்கில்லாதவன் என்று தனக்கு தானே ஆதாரத்தை கொடுத்திருக்கிறார்.***

I. ***பி.ஜே. இதை, இன்னும் வலுவாக்கி Conform செய்திருக்கிறார் !!!...***

12. யாரும் தன்னை மிஞ்ச முடியாத அளவுக்கு மிக சிறந்த சதிகாரனை எப்படி இறைவன் என்று சொல்ல முடியும் ???!!!

3:54. அவர்கள் சதி செய்தார்கள். *அல்லாஹ் (அவர்களுக்குச்) சதி செய்துவிட்டான். அல்லாஹ், சதி செய்பவர்களில் மிக மேலான (சதி செய்ப)வன்.*

Same Orgivement!

13. யாரும் தன்னை அன்பில் மிஞ்ச முடியாத அளவுக்கு, அன்பில் நம்மை முந்தி கொள்ளும் மெய்யான இறைவனாகிய கர்த்தருக்கு நேர் எதிராக, சூழ்ச்சி செய்வதில் முந்தி கொண்டு, மிக தீவிரமான சூழ்ச்சிகாரன் எப்படி இறைவனாக இருக்க முடியும்?

"அல்லாஹ் சூழ்ச்சியால் மிக தீவிரமானவன் "- 10:21.

– சங்கை மிக்க குர்-ஆன் – King Fahath Translation

அல்லாஹ்வின் சூழ்ச்சி முந்திக் கொள்ளும்!" – **10:21.**

-Dharul Hudha - அப்துல் ஹமீது பாகவி தமிழாக்கம்.

நம் பரிசுத்த வேதாகமத்தின் தேவனுடைய மேன்மை :

I யோவான் 4:19 : அவர் முந்தி நம்மிடத்தில் அன்புகூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்புகூருகிறோம்.

14. தன் சூழ்ச்சி சக்தியை காட்டி மிரட்டி, தன் சூழ்ச்சி சக்திக்கு பயப்படும் படி, மிரட்டல் விடுக்கிறவனை எப்படி இறைவன் என்று சொல்ல முடியும்?

என்ன ! இம்மக்கள் அல்லாஹ்வின் சூழ்ச்சி குறித்து அச்சமற்றிருக்கின்றார்களா?

உண்மையில் அழிந்து போகக்கூடிய மக்கள்தாம் அல்லாஹ்வின் சூழ்ச்சி குறித்து அச்சமற்றிருப்பார்கள். (7:99 – iFt – quran)

Are then they secure against the "contrivance of Allah?" And none feeleth secure against the contrivance of Allah except the people who are losers. (7:99 - Abdul Daryabadi – quran)

A. இது வரையில் தான் மாபெரும் சதிகாரன், சூழ்ச்சிக்காரன் என்று information-ஆக, சொல்லி கொண்டிருந்த அல்லாஹ் அடுத்த கட்டத்திற்கு சென்று மிரட்டல் விடுக்கிறார்.

B. அதுவும், எதை காண்பித்து: தன்னுடைய சூழ்ச்சி சக்தியை காண்பித்து!

C. மனசாட்சிக்கே அடுக்காத, இவ்வளவு பயங்கரமான, தனக்கு மட்டுமே உரிய, சூழ்ச்சி சக்தியை காட்டி மிரட்டி, தன் சூழ்ச்சி சக்திக்கு பயப்படும் படி மிரட்டல் விடுக்கிறவன், எப்படி இறைவனாக இருக்க முடியும்.

D. சாதாரண நல்ல மனிதனாக கூட இருப்பதற்கு, லாயக்கில்லாதவன் எப்படி இறைவனாக முடியும் ???!!!...

15. அனைத்து சூழ்ச்சிகளும் தனக்கே உரியது என்பவன் எப்படி இறைவனாக இருக்க முடியும்?

சூழ்ச்சிகள் அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியன .

(13:42 – iprc - quran)

- ***but unto Allah belongeth the plotting entirely!***

(13:42 - Abdul Daryabadi – quran)

Those who were before them plotted; but all plotting is Allah's.

(13:42 - Pickthal –English quran)

A. தன் சூழ்ச்சி சக்திக்கு பயப்படும்படி தன் சூழ்ச்சி சக்தியை காட்டி மிரட்டல் விடுத்த அல்லாஹ்,

B. இறுதியில் உச்ச நிலைக்கு சென்று "சூழ்ச்சிகள் அனைத்தும் தனக்கே உரியது" என்று சொல்லி,

C. தான் உண்மையான இறைவனின் ஒரே மாபெரும் எதிரி என்றும்,

D. இறைதன்மைக்கே அடுக்காத, சாதாரண மனித தன்மைக்கு கூட அடுக்காத மிக பயங்கரமான, அனைத்து சூழ்ச்சிகளின் மொத்த உருவமாக விளங்குபவன் என்று நிரூபித்து இருக்கிறார்.

E. அல்லாஹ் என்பவன் அணுவளவும் இறைத்தன்மையே இல்லாதவன் என்பதற்கு இது மிக மிக வலுவான வசனம் ஆகும்.

F. அல்லாஹ் யார்? என்று கேட்டால், அதற்கு ஒரே வார்த்தையில் பதில் சொல்ல கூடிய அளவுக்கு இந்த வசனம் மிக வலுவான ஆதாரமாக உள்ளது ...

G. இப்படி அனைத்து ஏமாற்றுத்தனங்களும் தனக்கே உரியது என்று எந்த மனிதனாவது சொன்னால், நாம் அப்படிப்பட்டவனை என்ன சொல்லுவோம்?

H. அப்படியானால் சாதாரண மனிதன் கூட இப்படிப்பட்டவனை இறைவன் என்று சொல்ல கற்பனையில் கூட நினைக்க மாட்டான்.

I. இதற்கு மேலும் இந்த குர்-ஆன் சொல்லுகிற இப்படிப்பட்ட அல்லாஹ்வை, இறைவன் என்று சொல்கிறவன் 100% மனநிலை பாதிக்க பட்டவனாகத்தான் இருப்பான் !!!...

J. சூழ்ச்சிகள் அனைத்தும் தனக்கே உரியது என்று சொல்லும் அல்லாஹ் என்பவன் நம் பரிசுத்த வேதாகமத்தின் படி யாரென்றால் :

வெளி – 12:9 - அப்பெரிய அரக்கப் பாம்பு வெளியே தள்ளப்பட்டது. அலகை என்றும் சாத்தான் என்றும் அழைக்கப் பெற்ற அதுவே தொடக்கத்தில் தோன்றிய பாம்பு. உலகு முழுவதையும் ஏமாற்றிய அது மண்ணுலகுக்குத் தள்ளப்பட்டது; அதன் தூதர்களும் அதனுடன் வெளியே தள்ளப்பட்டார்கள்.

Rev 12:9 - And the great dragon was cast out, that old serpent, called the Devil, and Satan, which deceiveth the whole world : he was cast out into the earth, and his angels were cast out with him. - The HOLY BIBLE

16. மனிதர்களின் பாவங்கள் இன்னும் அதிகமாக வேண்டும், என்றே அவர்களை அழிக்காமல் விட்டு வைத்துள்ளேன் என்று சொல்கிறவன் எப்படி இறைவனாக இருக்க முடியும் ?

3:178. நிராகரிப்பவர்களை (தண்டிக்காமல்) நாம் தாமதப் படுத்துவது தங்களுக்கு நல்லதென்று நிச்சயமாக அவர்கள் எண்ணிவிட வேண்டாம். (வேதனையை) நாம் அவர்களுக்குத் தாமதப்படுத்துவதெல்லாம் (அவர்களுடைய) பாவம் (மென்மேலும்) அதிகரிப்பதற்காகவேதான். (முடிவில்) அவர்களுக்கு இழிவு தரும் வேதனையுண்டு.

A. இது தான் இறைவனின் தன்மையா ???!!!

B. மனிதர்களின் பாவங்கள் இன்னும் அதிகரிக்க வேண்டும் என்று இவ்வளவு கொடூரமான விருப்பத்தை உடையவன் இறைவன் என்று அழைக்க படுவதற்கு கூட தகுதியற்றவன் என்று சாதாரணமாக சிந்திக்கும் மக்கள் கூட அறிந்து கொள்வார்கள்.

C. சாதாரண மனிதர்களாகிய நாமே பாவம் செய்யும் மனிதர்கள் எப்படியாவது திருந்த வேண்டும் என்று தானே விரும்புவோம்.

D. இந்த சாதாரண மனசாட்சி உள்ள மனிதர்களுக்கு இருக்கும் இந்த சாதாரண நல்ல குணாதிசயம் கூட இல்லாதவன் எப்படி இறைவனாக இருக்க முடியும் ?!

E. நம் பரிசுத்த வேதாகமத்தின் தேவனுடைய மேன்மை :

எசேக்கியேல் 33:11 கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால் : நான் துன்மார்க்கனுடைய மரணத்தை விரும்பாமல், துன்மார்க்கன் தன் வழியைவிட்டுத் திரும்பிப் பிழைப்பதையே விரும்புகிறேன் என்று என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்; இஸ்ரவேல் வம்சத்தாரே, உங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்புங்கள், திரும்புங்கள்; நீங்கள் ஏன் சாகவேண்டும் என்கிறார் என்று அவர்களோடே சொல்லு.

17. மரிக்கும் போதும் மனிதர்கள் தங்கள் பாவத்திலேயே மரிக்க வேண்டும் என்று மிக மிக தவறாக விரும்புகிறவன் எப்படி இறைவனாக இருக்க முடியும் ?

9:55. அவர்களிடமுள்ள செல்வங்களும், அவர்களின் மக்களும் உம்மை வியப்பில் ஆழ்த்திட வேண்டாம்! அல்லாஹ்வோ இவற்றின் மூலம் உலக வாழ்க்கையில் அவர்களை வேதனையில் ஆழ்த்திட வேண்டும் என்றும், சத்தியத்தை அவர்கள் நிராகரித்துக் கொண்டிருக்கும் நிலையிலேயே அவர்களின் உயிர்கள் பிரிய வேண்டும் என்றுமத்தான் நாடுகின்றான். Ift -quran

அவர்கள் நிராகரிப்பவர்களாக இருக்கும் நிலைமையில் அவர்களுடைய உயிர் போவதையும் (நாடுகிறான்.) - Dharul hudha quran

A. ஒரு மனிதன் மனந்திரும்பாமல் தன் பாவத்திலேயே மரித்தால் அவன் நரகத்திற்குத்தான் செல்வான் என்பதால், அல்லாஹ் மனிதர்கள் மரிக்கும் போது கூட தங்கள் பாவத்திலேயே மரிக்க வேண்டும் என்று விரும்புகிறான்.

B. அவர்கள் என்ன பாவங்களை செய்திருந்தாலும், மெய்யான இறைவனாக இல்லாத படியினால் அவர்கள் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பாமல் தங்கள் பாவத்திலேயே மரிக்க வேண்டும் என்று இந்த அல்லாஹ் விரும்புகின்றான்.

C. பெற்றவர்களுக்குத்தான் தங்கள் பிள்ளைகள் மேல் மெய்யான அன்பு இருக்கும். அதே போல, மனிதனை படைத்த மெய்யான இறைவனுக்கு தான் மனிதர்கள் தப்பி தவறி கூட நரகத்திற்கு சென்று விட கூடாது என்ற உண்மையான அன்பு இருக்கும் !!!...

நம் பரிசுத்த வேதாகமத்தின் தேவனுடைய மேன்மை :

எசேக்கியேல் 18:23-துன்மார்க்கன் சாகிறது எனக்கு எவ்வளவே...னும் பிரியமோ? அவன் தன் வழிகளை விட்டுத் திரும்பிப் பிழைப்பது அல்லவோ எனக்குப் பிரியம் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

இப்போது, சாதாரணமாக சிந்திக்கும் மனிதர்களுக்கு கூட யார் மெய்யான இறைவன் என்று மிக எளிதாக புரியும் !!!...

18. மனிதர்கள் தங்களுக்குள் சண்டை செய்து கொண்டே இருக்க வேண்டும் என்று, மிக பயங்கர தவறாக விரும்புவதோடு மட்டுமல்லாமல், அப்படி சண்டை செய்து கொண்டிருக்கும் படி செய்பவன் எப்படி இறைவனாக இருக்க முடியும்?

2:253. அத்தூதர்கள் - அவர்களில் சிலரைச் சிலரைவிட நாம் மேன்மையாக்கி இருக்கின்றோம்; அவர்களில் சிலருடன் அல்லாஹ் பேசியிருக்கின்றான்; அவர்களில் சிலரைப் பதவிகளில் உயர்த்தியும் இருக்கின்றான்; தவிர மர்யமுடைய மகன் ஈஸாவுக்கு நாம் தெளிவான அத்தாட்சிகளைக் கொடுத்தோம்; இன்னும், ரூஹுல் குதுஸி (எனும் பரிசுத்த ஆத்மாவைக்) கொண்டு அவருக்கு உதவி செய்தோம்;

அல்லாஹ் நாடியிருந்தால், தங்களிடம் தெளிவான அத்தாட்சிகள் வந்த பின்னரும், அத்தூதுவர்களுக்குப்பின் வந்த மக்கள் (தங்களுக்குள்) சண்டை செய்து கொண்டிருக்க மாட்டார்கள்; ஆனால் அவர்கள் வேறுபாடுகள் கொண்டனர்; அவர்களில் ஈமான் கொண்டோரும் உள்ளனர்; அவர்களில் நிராகரித்தோரும் (காஃபிரானோரும்) உள்ளனர்; அல்லாஹ் நாடியிருந்தால் அவர்கள் (இவ்வாறு) சண்டை செய்து கொண்டிருக்க மாட்டார்கள்; ஆனால் அல்லாஹ் தான் நாடியவற்றைச் செய்கின்றான்.

A. இந்த வசனத்தில்: அல்லாஹ் நாடியிருந்தால் அவர்கள் (இவ்வாறு) சண்டை செய்து கொண்டிருக்க மாட்டார்கள் என்று சொல்லிவிட்டு அதோடு நில்லாமல்,

B. அல்லாஹ் தான் நாடியவற்றைச் செய்கின்றான். என்று சொன்னதன் மூலம், அல்லாஹ் மனிதர்கள் ஒற்றுமையாக இல்லாமல் ஒருவருக்கொருவர் சண்டை செய்ய வேண்டும் என்று தவறாக நாடுவதோடு நிற்காமல், அதை செய்ய வைப்பவன் எப்படி இறைவனாக இருக்க முடியும்???!!!

19. தான் மெய்யான இறைவனாக இல்லாத படியினால், இறைவனின் பிள்ளைகளாக உறவாடுபவர்களை குற்றப்படுத்துபவர் எப்படி இறைவனாக இருக்க முடியும்?

5:18 - யூதர்களும், கிறிஸ்தவர்களும் "நாங்கள் அல்லாஹ்வின் குமாரர்கள் என்றும்; அவனுடைய நேசர்கள்" என்றும் கூறுகிறார்கள். அப்படியாயின் உங்கள் பாவங்களுக்காக உங்களை அவன் ஏன் வேதனைப் படுத்துகிறான்.

அப்படியல்ல! "நீங்கள் அவன் படைத்தவற்றைச் சேர்ந்த மனிதர்கள் தாம்" என்று (நபியே!) நீர் கூறும். தான் நாடியவர்களை அவன் மன்னிக்கிறான். தான் நாடியவர்களைத் தண்டிக்கவும் செய்கிறான்.

A. பரிசுத்த வேதாகமத்தின் மெய்யான இறைவன் மனிதர்களின் தந்தை என்று சொன்னதை அல்லாஹ் மறுதலிக்கிறார் . இது அல்லாஹ்வின் முதல் குற்றமாகும்.

B. இரண்டாவதாக, அவர் கிறிஸ்தவர்களையும் யூதர்களையும் குற்றப்படுத்துகிறார் .

C. அதாவது இவர்கள் தேவனுடைய பிள்ளைகள் என்று தங்களை அழைத்துக்கொள்கிறார்கள் என்று அல்லாஹ் குற்றப்படுத்துகிறார்.

D. ஆதியாகமத்திலிருந்து வெளிப்படுத்தல் வரை பல ஆயிர ஆண்டுகளாக தந்தை என்று மக்கள் தேவனை அழைப்பதை, கி.பி. ஏழாம் நூற்றாண்டில் , அல்லாஹ் இது தவறு என்றுச் சொல்வதை பார்க்கும்போது, நமக்கு சிரிப்பு தான் வருகிறது, இவரையா கிறிஸ்தவர்கள் இறைவன் என்று நம்புவார்கள் ?

E. இவர் எப்படி பரிசுத்த வேதாகமத்தின் இறைவனாக இருப்பார் ???!!!...

F. மெய்யான இறைவனுடைய தந்தைத்துவத்தை இவ்வளவு பகிரங்கமாக மறுதலிக்கிறவன் எப்படி பரிசுத்த வேதாகமத்தின் இறைவனாக இருப்பான் .

G. இந்த அல்லாஹ்வை குறித்து நம் பரிசுத்த வேதாகமம் என்ன சொல்லுகிறதென்றால் :

I யோவான் 2:22 இயேசுவைக் கிறிஸ்து அல்ல என்று மறுதலிக்கிறவனேயல்லாமல் வேறே யார் பொய்யன்? பிதாவையும் குமாரனையும் மறுதலிக்கிறவனே அந்திக்கிறிஸ்து.

நம் பரிசுத்த வேதாகமத்தின் தேவனுடைய மேன்மை:

யோவான் – 1: 12 அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்.

Halleluyah! Halleluyah!! Halleluyah!!!

இப்படிப்பட்ட மேன்மையான ஸ்தானத்தை மனிதனுக்கு கொடுக்கிற பரிசுத்த வேதாகமத்தின் இறைவனை தவிர வேறொருவர் இருக்க முடியுமா???!!!

பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளில் தேவன் தம்மை உலக மக்களின் தந்தை என்று மேன்மையாக சொல்கிறார். (உபாகமம் 32:6, சங்கீதம் 2:7, ஏசாயா 63:16, மத்தேயு 6:9, யோவான் 20:17 & ரோமர் 8:15). நாம் அவரிடம் "அப்பா" என்று அன்புடன் அழைத்து ஜெபிக்கலாம். அவரும் நம் வேண்டுதல்களுக்கு ஒரு தந்தையாக இருந்து பதில் தருகிறார்.

ஆனால், அல்லாஹ்வை "அப்பா" என்று அழைக்கக்கூடாது என்று இஸ்லாம் கூறுகிறது. பழைய ஏற்பாட்டு காலத்திலிருந்து தன்னை "பிதா" என்ற அழைக்க உற்சாகப்படுத்தும் தேவன், ஏழாம் நூற்றாண்டிலிருந்து ஏன் மனம் மாறிவிட்டார்?

